(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(7).]

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 பெப்ரவரி 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2026 மார்ச் 03, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 டிசம்பர் 18 ஆம் திகதிய 2467/67 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026 மார்ச் 05, வியாழக்கிழமை)**

1851/2026

கௌரவ அஜித்.பி.பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1989.11.13 ஆம் திகதி படுகொலைச் செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் திரு.ரோஹண விஜேவீரவின் மறைவின் பின்னர், அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் அவர்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அரசாங்கத்தின் பராமரிப்பின் கீழ் இருந்த ஆட்களுக்கும், திரு. ரோஹண விஜேவீரவுக்கும் இடையிலான உறவு முறை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்களை தடுத்து வைத்திருந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது அரச பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினைப் பெறுகின்ற திரு. ரோஹண விஜேவீரவின் குடும்ப அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை பராமரிப்பதற்காக இதுரையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு மதிப்பீட்டடிப்டையில் எவ்வளவு என்பதையும்;

(vi) தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெறுகின்ற அக்குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக அரசாங்கத்தால் மாதாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை)**

1849/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் நடவடிக்கைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2025.07.15 ஆம் திகதிய அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படிக் குழுவின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) அவ்விதப்புரைகளின் பிரகாரம், இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிருவாக மாற்றங்கள் யாவை என்பதையும்;

(v) குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளின் பிரகாரம், மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள சட்டரீதியான திருத்தங்கள் யாவை என்பதையும்;

(vi) அத்திருத்தங்கள் தொடர்பாக தற்போது நிலவும் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் இணக்கச் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) கடன் இணக்கச் சபைக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கடன் இணக்கச் சபைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 07, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

749/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களில் தற்போது எரிபொருள் மானியத்தைப் பெறும் கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) எரிபொருள் மானியத்தை உரிய நேரத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

764/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் கடவத்தை-மீரிகம வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அந்தப் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த ஒப்பந்தக்காரர் / ஒப்பந்தக்காரர்கள் யார் / யாவர் என்பதையும்;

(iii) இதுவரை அதற்கென செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது அதன் நிர்மாணப் பணிகள் ஸ்தம்பித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை மீள ஆரம்பிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

842/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது கழிவுகளை அகற்றும் கரதியான பிரதேசத்தில், கழிவுப்பொருள் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறித்து அறிவாரா;

(ii) இதிலிருந்து உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) மேற்படி நிலையத்தின் நிர்மாணப் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

884/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1014/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டிலும், நாடு முழுவதிலும் மற்றும் வட மாகாணத்தினுள்ளும் வெவ்வேறாகப் பதியப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடைய சைபர் குற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ அரசாங்க சைபர் குற்றப் பதிவு இணையதளங்களூடாக (Portals) அல்லது பொலிஸ் சைபர் அலகுகளினூடாக வட மாகாணத்திலிருந்து பெறப்பட்ட அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறிப்பாக வட மாகாணக் கிராமியப் பெண்களுக்கான சைபர் குற்றப் பதிவுப் பொறிமுறைகளையும் பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சேவைகளுக்கான அணுகல் பொறிமுறையினையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1030/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பல்வேறு அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் 2020ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவ்வைத்தியசாலையில் 16 வயது வரையான சிறுவர்கள் மாத்திரமே சிகிச்சைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் பல்வேறு அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக சிறுவர்கள் காத்திருக்கும் காலத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1089/2025

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனிக்காக புதிதாக A330-200 wide body விமானம் பெற்றுக்கொள்ளப்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந்தக் கம்பனியை பரிந்துரை செய்தது யாரென்பதையும்;

(iii) மேற்படி விமானம் உற்பத்தி செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அந்த விமானம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், குத்தகை தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மாதாந்த குத்தகை தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1246/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம கமநல சேவைகள் நிலையத்தில் ஒரு தொகை உரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உரத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி உரம் எந்த ஆண்டிலிருந்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி உரத்தொகையை இதுவரையில் விவசாயிகளுக்கு விநியோகிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி உரத்தொகையை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்காகப் பின்பற்றப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(vii) மேற்படி உரத்தொகையை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1369/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை அரச பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் காரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருப்பின் அவ்வெண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை பாடசாலைக் கட்டமைப்பில் துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1679/2025

கௌரவ லால் பிரேமநாத்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘அஸ்வெசும’ நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுள் தீர்வு காணப்பட்டு வரும் மற்றும் மீள நலன்புரி நன்மைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்வு காணும் நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ‘அஸ்வெசும’ பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக தர்க்க ரீதியிலான தரவு முறைமையொன்றினை அறிமுகம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அதனூடாக உறுதிப்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கின்ற புதிய தரவுகள் யாவையென்பதையும்;

(iii) போலியான தகவல்களை வழங்கி நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொண்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) அவர்களுக்கு செலுத்திய பணத்தை மீள அறவிட்டுக்கொள்வதற்கு மற்றும் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மீள அறவிட்டுக்கொண்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் ‘அஸ்வெசும’ நலன்புரி நன்மைகளை ஒப்பீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பயனாளிகளின் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1318/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் 2500இற்கும் மேற்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் நீண்டகாலமாக அரச நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர் என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 61 ஆயுர்வேத மருத்துவ நியமனங்களில் யுனானி மருத்துவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாமையினால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1456/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு, முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வாடகைக் கட்டத்தில் இயங்குகின்றது என்பதையும்;

(ii) அந்த அலுவலகத்திற்கென ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள காணி தற்போது இராணுவத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வட மாகாணத்தில் தற்போது தனியார் கட்டடங்களில் நிறுவப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கென செலுத்தப்படுகின்ற மொத்த வாடகைத் தொகை மாவட்ட வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்காக நிரந்தரக் கட்டடமொன்றை அமைக்க எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்கென 2026 வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1563/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் பல்கலைக்கழகங்களில் கல்விசார் பணியாட்டொகுதியில் தற்பொழுது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உருகுணை பல்கலைக்கழகத்தில் 2023ஆம் ஆண்டில் இணைச் சுகாதார பாடநெறிகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான பாடநெறிகள் இதுவரையில் ஆரம்பிக்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1651/2025

கௌரவ சுனில் ரத்னசிறி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய கலாசார நிதியம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, அதனது நிதியை சமயத் தலங்களின் மறுசீரமைப்புக்காக பயன்படுத்தி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய புனரமைப்புகள் மத்திய கலாசார நிதியத்தின் எப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் உரிய பெறுகை செயன்முறைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சமய மற்றும் கலைப் பணிகள் ஊக்குவிப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக செயலாற்றிய அலுவலர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(ii) மேற்படி பிரிவின் பணிப்பாளரை நியமனம் செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 'சிசு தஹம் செவண' நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திட்டத்தின் ஊடாக அறநெறிப் பாடசாலை கட்டடமொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகள் / சமய தலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1655/2025

கௌரவ சானக மாதுகொட,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டம் (Inclusive Connectivity & Development Project) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வீதியினதும் பெயர் மற்றும் செலவிடப்பட்ட தொகை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அப்பணிகள் நிறைவு பெறாமலுள்ள வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படிக் கருத்திட்டம் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) காலி மாவட்டத்திற்கு ஏற்புடையதாக மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டத்தை காலி மாவட்டத்தில் ஆரம்பிக்க நீண்ட காலம் எடுத்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1187/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளிகளை நடத்துகிறது என்பதையும், அத்தகைய முன்பள்ளிகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் சம்பளம் வழங்கப்படுவதையும் அவர் அறிவாரா;

(ii) அந்த மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்பள்ளிகளில் கடமையாற்றுகின்ற, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் சம்பளம் வழங்கப்படுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த மொத்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி முன்பள்ளி மாணவர்களின் சீருடைகளுக்காக பெற்றோரிடமிருந்து பணம் அறவிடப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒரு பிள்ளைக்கான அறவீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தொகை அறவிடப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய சீருடைகளில் இராணுவச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி முன்பள்ளிகள் மாகாண சபையின் கீழ் இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் இந்த முன்பள்ளிகள் வழிநடத்தப்படுவதன் சட்டப் பின்னணி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1408/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன்னித் தேர்தல் மாவட்டத்திற்குரிய வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் தமது சொந்தக் காணிகளில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில், அரசாங்கத்திடம் இருந்து சட்டரீதியான காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டுள்ள மற்றும் காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘உருமய’ வேலைத்திட்டம் மீளவும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1473/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள மேற்கு தாராபுரம் கிராம அலுவலர் பிரிவில், பூர்த்தி செய்யப்படாத நிலையில் கைவிடப்பட்டிருக்கும் கூட்டுறவு கிராம கருத்திட்டத்திற்குரிய இரண்டு கட்டிடங்கள் உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு, மன்னார் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்கான சாத்தியவள அறிக்கை உட்பட அனைத்து அனுமதிப் பத்திரங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக ஏதேனும் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், அவ்வறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிப்படுத்தல் உறுதியின் மூலம், வரையறுக்கப்பட்ட இலங்கை முயற்சியாண்மை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சட்டவிரோதமான முறையில் உரித்தைப் பெற்றுக்கொண்ட காணியிலேயே இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மாத்திரம் நிறுவப்பட்டு, குறிப்பிட்ட அமைச்சில் பதிவு செய்யப்பட்டு, தற்போது செயற்படாத நிலையில் காணப்படுகின்ற இச்சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி, பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவிலக்கம் போன்றவற்றின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இச்சங்கத்தின் யாப்பின் பிரதியொன்றை அமைச்சர் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்கள், தனிப்பட்ட முகவரிகள் உள்ளிட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) இச்சங்கத்தின் ஊடாக இற்றைவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1503/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை இலங்கையில் மிளகுச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப்பரப்பு மற்றும் மிளகு உற்பத்தி என்பன ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும், மாவட்ட ரீதியாகவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மிளகு ஏற்றுமதி மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மிளகுச் செய்கையாளர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1545/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்ட மக்கள் வாழும் காணிகளுக்கான முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாமையால், பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதை அறிவாரா;

(ii) ஆமெனில், இது தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1640/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தோப்பூர் உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை என்பதையும், அதன் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரிகங்கள் பற்றியும் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி உப பிரதேச செயலகமானது பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) குறித்த உப பிரதேச செயலகத்தை எதிர்காலத்தில் பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1673/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்ன உல்லை, அறுகம்பே, சர்வோதயபுரம், ஜலால்தீன் சதுக்கம், குடாக்கள்ளி, விஸ்கி பொயிண்ட், கொட்டுக்கல் மற்றும் லைட் ஹவுஸ் போன்ற சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விடுதிகளை நடத்துபவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் சரியான முறையில் நில அளவீடுகளை செய்து உறுதிகளை வழங்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய ஆவணங்கள் இல்லாத சுற்றுலா விடுதிகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக, பொத்துவில் பிரதேச சபைக்கு ஏற்புடைய வியாபார வரிகளை அறவிட முடியாமல் உள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், பிரதேச செயலாளரின் அனுமதியின் கீழ் தனியார் நில அளவையாளர்கள் மூலம் நில அளவை செய்து 'உருமய' உறுதிகளை விரைவாகப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க முடியுமா என்பதையும்;

(v) அவ்வாறு நில அளவையாளர்களால் தயாரிக்கப்படும் வரைபடத்தைப் பயன்படுத்தி அந்தக் காணிகளை 'உருமய' திட்டத்தில் சேர்க்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1853/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலைத் துறைமுகம் கடந்த 15 ஆண்டு காலப்பகுதியில் ஈட்டியுள்ள செயற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி துறைமுகத்திற்குச் சொந்தமாகவிருந்த இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் பின்னர் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்கள் துறைமுக அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய குத்தகைப் பணம் அல்லது ஏனைய கொடுப்பனவுகளைச் சரியான முறையில் செலுத்தியுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், கடந்த 20 ஆண்டு காலப்பகுதிக்குரிய மேற்படி கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது திருகோணமலைத் துறைமுகத்தினுள் அரசாங்கத்திற்கு முழுமையான, ஓரளவு அல்லது பகுதியளவிலான உரித்தினைக் கொண்டுள்ள இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(viii) திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக காணப்படும் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1861/2026

கௌரவ ருவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் பாடசாலை விளையாட்டுப் பயிற்றுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்சேர்ப்பு சார்ந்த அடிப்படைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) பாடசாலை விளையாட்டுப் பயிற்றுநர்களாக இவர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படும் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை மேற்படி பதவியில் கடமையாற்றும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1905/2026

கௌரவ ஆர். ஜீ. விஜேரத்ன,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன்கெத வாடிவீடு அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்டது என்பதையும்;

(ii) அங்கு சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வாடிவீட்டை நடத்திச் செல்பவரின் பெயர் யாதென்பதையும்;

(ii) அவருக்கு மேற்படி வாடிவீடு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iii) அவர் மேற்படி வாடிவீட்டை நடத்திச் செல்லும் காலம் யாதென்பதையும்;

(iv) அரசாங்க வாடிவீடுகளிலிருந்து பயனுறுதிமிக்க சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2026 ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

25/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் காணப்படும் கல்விசாரா பதவிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, அத்தகைய பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகங்களில் கல்விசாரா பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவதை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

122/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை உரித்தாகவுள்ள உத்தியோகபூர்வ சிறப்புரிமைகள் யாவையென்பதையும்;

(ii) அச்சிறப்புரிமைகள் குறைக்கப்படுமா, இன்றேல், நீக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறைக்கப்படும் / நீக்கப்படும் சிறப்புரிமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் தொடர்பாக ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரைகள் யாவையென்பதையும்;

(ii) அதனோடு தொடர்புடைய அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனமொன்றை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு பாராளுமன்ற உணவகத்திலிருந்து உணவு, பானங்கள் வழங்குதல் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

357/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குற்பட்ட மயிலவட்டுவான் பிரதேசத்திலுள்ள கிரான்புல் அணைக்கட்டை, நிரந்தரமானதொரு அணைக்கட்டாக நிர்மாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் அப்போதைய கமத்தொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அடிக்கல் நாட்டிய போதிலும் இதுவரையிலும் அதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி, நிரந்தர அணைக்கட்டை நிர்மாணிப்பதன் மூலம், சுமார் 8000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் பயனடைவதோடு, இலுக்குப்பொத்தான, ஈரளக்குளம், பாலமீன்மடு மற்றும் மயிலவட்டுவான் போன்ற கிராமங்களுக்கு தரைவழி மூலமாக போக்குவரத்து வசதிகளை வழங்க முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

567/2025

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சந்தையில் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அண்மைக் காலத்தில் அரிசி இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பிரகாரம், அரிசி இறக்குமதி செய்த அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர்கள், அத்தகைய ஒவ்வொரு நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு மற்றும் அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த வரி வருமானம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) நெல் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் மற்றும் அரிசி விற்பனை செய்தல் தொடர்பில் அரசாங்கத் தரப்பின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

641/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான, மணித்தியாலத்துக்கு 2000 கிலோ கிராம் அரிசி வழங்கல் கொள்ளளவைக் கொண்ட 2 அரிசி வழங்கல் கட்டடத் தொகுதிகள் ஹிங்குரக்கொடை மற்றும் பன்னெகமுவ பிரதேசங்களில் அமைந்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) அக்கட்டடத் தொகுதிகள் இறுதியாக பயன்படுத்தப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) இக்கட்டடத் தொகுதிகள் குறைப் பயன்பாட்டில் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடத் தொகுதிகளை மீள இயக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1881/2026

கௌரவ ஜகத் விதான,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்க அனுமதிக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 811ஆகவிருப்பினும், தற்போது அங்கு சுமார் 2000 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) அந்தச் சிறைச்சாலையில் சிறைச்சாலைக் காவலாளர் மற்றும் சார்ஜன்ட் பதவிகளில் காணப்படுகின்ற பெரும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) அலுவலர் பற்றாக்குறை காரணமாக தற்போது சேவையிலுள்ள அலுவலர்கள், சில நாட்களுக்குத் தொடர்ச்சியாக கடமையாற்ற வேண்டியிருக்கின்ற நிலைமையைச் சீர்செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறுங்கால நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களின்போது வெற்றிடமான பதவிகளுக்கு புதிய அலுவலர்கள் இணைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) காலி மற்றும் மாத்தறை சிறைச்சாலைகளில் ஊழியர் மிகை காணப்படுகின்ற நிலையில், களுத்துறை சிறைச்சாலையில் அலுவலர் வெற்றிடம் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ள முறையற்ற அலுவலர் இடமாற்றங்கள் எவ்வாறு சீர்செய்யப்படும் என்பதையும்;

(vi) அலுவலர் பற்றாக்குறை காரணமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் பணிகளில் தாமதம் ஏற்படுவதால், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1882/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வித் துறைசார் தொழில்வாண்மையாளர்கள் என்ற வகையில் தேசியக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடநெறிக்கும் இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிக் காலம் என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி பாடநெறிகளுக்கான மதிப்பீட்டு முறைகள் ஒவ்வொரு பாடநெறிக்கும் அமைவாக வேறுபடுகின்றனவா;

(iv) ஆமெனில், அத்தகைய பாடநெறிகள் யாவை;

(v) மாணவர்களை இணைத்துக்கொண்டதன் பின்னர், குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படாத பாடநெறிகள் உள்ளனவா;

(vi) ஆமெனில், அத்தகைய பாடநெறிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1884/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை கரையோரப் பிரதேசத்தில் அதிகளவில் ஒன்றுசேரும் திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு நீண்டகால மற்றும் நிலைபேறான முறைமைகள் இல்லாததன் காரணமாக நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கரையோரப் பிரதேசத்தில் கழிவுகளைக் கொட்டுமிடங்கள் அதன் கொள்ளளவை அடைந்துள்ள நிலையில் அல்லது விஞ்சியுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களால் கழிவுகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடங்களைக் கண்டறிய முடியாததன் காரணமாக சுற்றுச்சூழல் சீர்கேடுகள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை கரையோரப் பிரதேசத்தில் தற்போது நிலவும் திண்மக் கழிவுப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) மின்னுற்பத்தி, உயிர் வாயு உற்பத்தி, மீள்சுழற்சி, நிர்மாணப் பொருட்கள் தயாரிப்பு, கூட்டெரு தயாரிப்பு போன்றவை அடங்கலான ஒருங்கிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவத்தை இப்பிராந்தியத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஏதேனும் திட்டமுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1904/2026

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில், லுனுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவில் படவுகம கிராம அலுவலர் பிரிவில் இந்திய உதவித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்கள் உள்ளனவா;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கருத்திட்டங்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திலும் உள்ள வீடுகளின் எண்ணிக்கை, ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, செலவிடப்பட்ட தொகை மற்றும் தற்போதைய நிலைமை கருத்திட்ட வாரியாக வெவ்வேறாக யாவை;

(v) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களை வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லும் திட்டம் உள்ளதா;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

1918/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புறக்கோட்டையில் உள்ள 'ஜன ரஜ சிட்டி' பேரங்காடிக் கட்டடத்தை மீள நிர்மாணிப்பதற்காக அக்கட்டடம் சிறிது காலத்திற்கு முன்னர் அகற்றப்பட்டுள்ளதுடன், இதுவரை அக்கட்டடம் மீள நிர்மாணிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வியாபாரிகளுக்கு கடை அறைகள் வழங்கப்பட்டிருந்தன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பான தற்போதைய நிலை யாதென்பதையும்;

(iii) அதனை நிர்மாணித்து முடிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?